**சிசி 119/2023**
**ம. சா. 1**
**பெயர் : சுகந்தி**
**07.02.2025**
**எதிரி தரப்பில் பிரிவு 145 மாற்று முறை ஆவணச்சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டதன் பேரில் விசாரிக்கப்படுகிறார்.**
**எதிரி தரப்பில் கு வி**

1. எதிரியின் கணவர் பெயர் என்னவென்றால் பழனிச்சாமி என்று சொன்னார்கள். காளவாசலில் இருப்பதாக சொன்னார்கள். அவர்கள் வீட்டிற்கு நான் சென்றது இல்லை. அவர் எங்கு குடியிருக்கிறார் என்று எனக்கு தெரியாது அவர் அலுவலகத்திற்கு தான் நான் சென்றுள்ளேன். நான் புகாரில் தாக்கல் செய்துள்ள எதிரியின் முகவரியானது அவருடைய அலுவலக முகவரியா என்றால் ஆமாம். நான் மேற்படி அலுவலகத்திற்கு 2, 3 தடவை பணம் கேட்டு சென்றுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள புகார், வழக்கறிஞர் அறிவிப்பு, நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில் எதிரி மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறார் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

2. எதிரி புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரியில் உள்ள அலுவலகத்தில் RPD Group நிறுவனத்தில் எதிரி அக்கவுண்ட்டாக பணிபுரிந்து வந்தார் என்றால் அவர் என்ன வேலை பார்த்து வந்தார் என்று தெரியாது. அது அவருடைய மகனின் அலுவலகம் என்றும் அவர் என்னிடம் சொல்லியிருந்தார். RPD Group நிறுவனத்தின் உரிமையாளர் ஜெயச்சந்திரன் என்றால் எனக்கு தெரியாது. எதிரியின் கணவர் பெயர் பன்னீர்செல்வம் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்த பின்பு எனது வக்கீலிடம் அவருடைய கணவர் பெயர் பழனிச்சாமி என்று சொன்னார்கள். அதற்கு முன்னாடி அவருடைய கணவர் பெயர் எனக்கு தெரியாது.

3. நான் தாக்கல் செய்துள்ள புகாரில் எதிரி சுப்புலெட்சுமியின் கணவர் சொக்கலிங்கம் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். வழக்கறிஞர் அறிவிப்பு மசாஆ.4 லிலும் எதிரியின் கணவர் பெயர் சொக்கலிங்கம் என்றுதான் சொல்லியுள்ளனே் என்றால் ஆமாம். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலும் எதிரியின் கணவர் பெயர் சொக்கலிங்கம் என்று இருந்ததால் தான் எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை வாங்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் முறையான தகவலுடன் முகவரியில் தெரிவித்திருந்தால் வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்று உரிய பதில் அறிவிப்பை அனுப்பியிருப்பார் என்றால் ஆமாம்.

4. எதிரியின் கணவர் பெயர் தெரியாது முகவரி தெரியாது என்றால் ஆமாம். எதிரி என்ன வேலை பார்க்கிறார் என்று எனக்கு தெரியாது என்றால் அவர் வேலை பார்ப்பதாக சொன்னார் நான் அங்கு சென்றுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள புகார் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் நானும் எதிரியும் நல்ல பழக்கமானவர்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். எனது சட்ட அறிவிப்பு மசாஆ.4 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் இல்லத்தரசியாக தான் உள்ளேன். எனது கணவர் மதுரை புதூரில் உள்ள ஒரு கம்பெனியில் வேலை செய்து வந்தார். மாதம் 18 ஆயிரம் வரை சம்பளம் பெற்று வந்தார். தற்போது எனது கணவர் திருச்சுழி பொம்மக்கோட்டையில் டீக்கடை வைத்துள்ளார்.

5. எனது கணவர் 18 ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வங்கி மூலமாக பெறவில்லை. மாத சம்பளத்தை ரொக்கமாக பெற்று வந்தார். மதுரையில் முதலில் 2500 ரூபாய்க்கு வாடகைக்கு இருந்தோம். அதன்பின்பு 3000 ஆக வாடகையை உயர்த்தினார்கள். தற்போது எனது சொந்த ஊரான குலசேகரநல்லூரில் சொந்த வீட்டில் குடியிருந்து வருகிறோம். எனக்கு 2 குழந்தைகள். ஒரு மகன் 6 வது வகுப்பும், ஒரு மகன் 1 வது வகுப்பும் எஸ்பிகே மெட்ரிக்குலேசன் பள்ளியில் பயின்று வருகிறார்கள். வருடத்திற்கு மூத்த பையனுக்கு 12 ஆயிரம் ரூபாயும், 2 வது பையனுக்கு 6 ஆயிரம் ரூபாயும் கல்வி கட்டணமாக செலுத்தி வருகிறேன்.

6. நான் சொன்னவாறு எனது கணவர் மதுரையில் எந்த கம்பெனியிலும் வேலை பார்த்து 18 ஆயிரம் ரூபாய் மாத சம்பளம் பெறவில்லை என்றால் இல்லை. எனது நாத்தனார் வீட்டுக்காரர் தான் அந்த கம்பெனியை வைத்திருந்தார் எனது கணவர் வேலை பார்த்தார். அவர் அங்கு வேலை பார்த்தற்காக எந்த ஆவணமும் என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் எனது நாத்தனார் வீட்டுக்காரரை தான் கேட்க வேண்டும்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு நாளுக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)**